# ஒற்றைத் தண்டவாளம்

ப. சொக்கலிங்கம்

**சோலைப் பதிப்பகம்**

22/2, சின்னையா நியூ காலனி, 2வது மெயின் ரோடு,
பெரம்பூர், சென்னை – 600 011. செல் 98405 27782

# நூல் விளக்கம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **ஒற்றைத் தண்டவாளம்** |
| நூலாசிரியர் | : | **ப. சொக்கலிங்கம்**<br>62, விக்டோரியா கார்டன்ஸ்,<br>20, ஜவஹர்லால் நேரு சாலை,<br>கோயம்பேடு, சென்னை – 600 107.<br>செல் 99400 84290<br>Email : chockalingam66@gmail.com |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | கவிதைகள் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு ஜூன் 2022 |
| வெளியீடு | : | சோலைப் பதிப்பகம்<br>22/2, ஏ.பி. அனுக்கிரஹா அபார்ட்மென்ட்,<br>சின்னையா நியூ காலனி 2வது மெயின் ரோடு,<br>பெரம்பூர், சென்னை – 600 011. |
| மொத்தப் பக்கங்கள் | : | 80 |
| தாளின் தன்மை | : | மேப்ளித்தோ 18.6 |
| எழுத்தளவு | : | 12 |
| கட்டடம் | : | ஆர்ட் போர்டு (லேமினேஷன்) |
| ஆலோசனை | : | சூ.க. முரளிகுமார், மதுரை |
| அட்டை ஓவியம் | : | சொ. தீப்தி |
| அச்சுக்கோப்பு மற்றும் அச்சு | : | சோலை பிரிண்டர்ஸ் & கிராபிக்ஸ்<br>எண். 51/1, பி.பி. ரோடு, பெரம்பூர்,<br>சென்னை – 600 011.<br>செல் : 98405 27782 |
| **விலை** | : | **ரூ 80/-** |



# பேனாவுக்கு மட்டுமல்ல இந்நூல் பேனாக்காரனுக்கும் பிறவிப்பயன் !

கலைமாமணி ஏர்வாடி **எஸ். இராதாகிருஷ்ணன்**

ஆசிரியர் 'கவிதை உறவு'

**க**விதை ஓர் அதிசயம், ஆச்சரியம். அதனால்தானே என்னவோ, மாக்கவி பாரதி "பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா" என்றான் எழுத்தின் எல்லா வடிவங்களும் நமக்குப் படிக்கப் படைக்கப்பட்டவை. படித்துத் தரப்பட்டவை. ஆனால் கவிதை மட்டுமே நம்மைப் பார்க்கச் செய்யும். ஒரு நல்ல கவிதை, வழங்குகிறவனை வசப்படுத்தியிருக்கும். வாசிக்கிறவனையும் வசியப்படுத்தியிருக்கும். சுருக்கமாக இருப்பதாலும், சுறுக்கென்று இருப்பதாலும்தான் கவிதை இவரின் நெஞ்சிலும் இலகுவாக பரந்து பதிந்து விடுகிறது.

சுருக்கமாக இருப்பதற்காகவே கவிதை கண்டுபிடிக்கப்பட்டிருக்கும். ஒரு வரியில் ஆத்திச்சூடி, ஒன்னே முக்கால் அடியில் திருக்குறள் மட்டுமல்ல, நீண்ட சங்ககாலப் பாடல்களில் கூட சில சிறிய வரிகள் நம் நெஞ்சங்களில் நிலைத்துவிட்டன. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று கணியன் பூங்குன்றன், "செம்புலப் பெயனீர்போல" என்று அன்புடை நெஞ் சங்கள் கலந்ததைச் சொன்ன, செம்புலப் பெயல் நீரால் பெற்ற புகழ் எல்லாம் சுருங்கிச் சிறந்த வரிகள்தான்.

கவிஞர் சொக்கலிங்கம் அவர்களுக்கு பத்திரமாகப் பாட்டுப் பயணம் போக இந்த 'ஒற்றைத் தண்டவாளம்' உதவியிருப்பதற்கு காரணம் சின்ன வரிகளும், சுவையான செய்திகளும்தான். அவர் படிக்கத் தந்த, இந்த நூலில்

நான் “பார்த்து” மகிழ்ந்த காட்சிகள் அநேகம். புதிதாக எழுத இனி எதுவும் இல்லாவண்ணம் நமது பாவலர்கள் எல்லாவற்றையும் பாடி முடித்த பின்னும், எழுத ஏதோ இருக்கவேண்டும். கவிஞர் சொக்கலிங்கம் அவர்கள் வள்ளுவப் பெருந்தகையிடம் வம்புக்குப் போவதே ஒரு பாட்டுக்கான செய்திதான்.

“எல்லாவற்றையும்
நீங்களே எழுதிவிட்டதால்
எதைப் பற்றி
நாங்கள் எழுதுவது“

என்பதே எழுதுவதற்கான செய்தியாகியுள்ளது கவிஞர் சொக்கலிங்கம் அவர்களுக்கு.

“எல்லோரும் சொல்வதை
யாரும் சொல்லாததுபோல்
சொல்வதுதான் கவிதை”

என்பேன் நான். அப்படித்தான் செய்திருக்கிறார் அருமை நண்பர் கவிஞர் சொக்கலிங்கம்.

மழை வேண்டும் என்றாலும், சில நேரங்களில் வேண்டாம் எனுமளவு நம்மை வருத்திச் சென்று விடுவதற்கு மழையின் மிகுதியே காரணமாகிவிடும். ஆயினும் அது அரசியல் நடத்தவும், ஆட்சியை விமர்சனம் செய்யவும் தேவைப்படுகிறது என்பதைக் கவிஞர் சொக்கலிங்கம் பதிவு செய்திருக்கிறார். கூடவே நம்மையும் அந்த கற்பனை வளையத்திற்குள் கொண்டு செல்கிறார்.

“தான் நின்று போகிறது
அரசியலைத்
துவக்கி வைத்துவிட்டு”

என்று மழைக்கு நம் மனதில் ஒரு இடம் பிடித்துத் தருகிறார் கவிஞர் சொக்கலிங்கம்.

நிலவைப் பாடாத கவிஞர்களே இல்லை எனலாம். ஒரு காலத்தில் ஆற்றலரசு என்கிற கவிஞர், என் இனிய நண்பர், நிலா நானூறு என்று நிலா கவிதைகளைத் தொகுத்திருந்தார். இப்போது அவர் இருந்திருந்தால்

நிலா நாலாயிரமாகியிருக்கும். நண்பர் கவிஞர் சொக்கலிங்கமும் அதில் சேர்ந்திருப்பார்.

"உன்னைக் காணும்
இரவெல்லாம்
முதலிரவாகிப் போகிறது
கவிஞர்களுக்கு"

என்ற கவிதையோடு. நேரம் குறித்தும், நேர நிர்வாகத்தின் அருமை குறித்தும் கவிஞர் சொக்கலிங்கம் அவர்களின் சிந்தனை புதியவை.

எது முக்கியம்? (Priority) என்பது தனக்கான நேரத்தை ஒதுக்கிக் கொள்கிறது என்கிற நேரநிர்வாகத்தை அவரது கவிதையொன்று கற்றுத் தருகிறது.

"முக்கியத்துவம்
பதுக்கி வைத்து விடுகிறது
நேரத்தை"

நூலில் ஒற்றைத் தண்டவாளத்தை எங்கே காணோம் என்று தேடுகிறபோது, நம்ம கவிஞருடைய ஆழ்வார்குறிச்சி புகைவண்டி நிலையத்திற்குள் வந்து விடுகிறோம். அது ஒரு நிலாக்காலம் என்பது போல், அது ஒரு ரயில்காலம் எனலாம். பொதிகைத் தென்றல் சுமந்துவரும் குளிர்ந்த காற்று, புகைவண்டிப் புகையில் குளிர்காய்ந்து கொண்டிருக்கிறதாம்.

"காற்று
குளிர்காய்ந்து கொண்டிருந்தது
புகைவண்டிப் புகையில்"

இதெல்லாம் சிற்றூர் ரயில் நிலையங்களுக்குப் போய் வந்தவர்களுக்கே தெரியும்.

"தண்டவாளத்தைப் பிரியும்
சக்கரங்களின் விசும்பல்
கிறீச்சென
புகைவண்டி கிளம்ப எத்தனிக்கையில்" என்பதும்

"புகைவண்டி
பயணத்திற்கு
வைத்து விடுகிறது உலை" என்பதும்

பழைய காலத்து ரயில்பெட்டிக்குள் நம்மைக் கவிஞர் ஏற்றிவிடுவது போன்ற பிரம்மையை ஏற்படுத்துகிறது.

'விசா' என்பது வெளிநாட்டுச் சாவியாம். சின்ன விஷயம். நமக்குத் தோன்றாமல் போய்விட்டதே என்று நினைக்கவைக்கிறது. இதே ரகத்தில் 'தேர்தல்' என்ற தலைப்பில்,

"வாக்குறுதிகள்
எழுதும்
தேர்வு"

என்கிறார் கவிஞர் ; அருமை.

கவிஞர் சொக்கலிங்கம், நம்மை ஒரு கிராமத்துத் திருவிழாவுக்குக் கூட்டிச் செல்கிற சில கவிதைகளில் நாம் கிராமங்களைத் தரிசிக்கிறோம். நம்மை சொக்க வைக்கும் சொக்கலிங்கத்தின் சில வரிகள்

"முந்தைய குதிரையில்
சென்ற தோழனை
குதிரையில் சென்று
முந்துவதற்குள்
நின்றுபோனது ராட்டினம்"

எனும்போது ராட்டினக் குதிரை நின்ற பிறகும் நமது கற்பனைக்கு குதிரை பறந்து கொண்டிருப்பதுதான் கவிதானுபவம். இப்படி எண்ணற்றவை; எண்ணத்தில் இனிப்பவை.

இந்நூலைப் படித்து முடிக்கிறபோது கவிஞரை அவரது பாட்டு வரிகளாலேயே நமக்குப் பாராட்டத் தோன்றும்.

"தமிழில் எழுதும் போதெல்லாம்
பிறவிப் பயன் எய்திவிடுகிறது
பேனா'

கவிஞரின் பேனா மட்டுமல்ல, அவரும்தான் பிறவிப் பயன் பெற்றிருக்கிறார் என்று அவரது பாட்டுத்திறனைப் பாராட்டி மகிழ்கிறேன்.

என்றும் அன்புடன்

**ஏர்வாடி எஸ். ராதாகிருஷ்ணன்**



# குறுவாள் !

திரைப்பட பாடலாசிரியர் கவிஞர் **நெல்லை ஜெயந்தா**

**கா**தலில் சிக்காதவர்கள் கூட கவிதையில் சிக்கி விடுகிறார்கள். படைக்கும்போது அவஸ்தைக்குள்ளாக்குகிற கவிதை, படிக்கும்போது ஆனந்தத்திற்குள்ளாக்குகிறது. சிறகுகளையும், சிலுவைகளையும் மாற்றி மாற்றி பூட்டி விடுகிற மாயக்கலை கவிதை. தெரிந்த செய்தியை தெரியாத கோணத்தில் சொல்வதே கவிதை. தமிழ்க் கவிதையின் வரலாறுதானே தமிழின் வரலாறு.

இப்படி கவிதையைப் பற்றிய சிந்தனைகள் எனக்குள் கண்ணாடித் துண்டுகளாய் சிதறியதற்கு காரணம் என் கைகளில் இருந்த நண்பர், பொறியாளர், தொழிலதிபர் ப.சொக்கலிங்கம் அவர்களின் ‘ஒற்றைத் தண்டவாளம்’ என்ற கவிதைத் தொகுப்புதான்.

பொறியாளர் சொக்கலிங்கம், வரியாளர் சொக்கலிங் கமாய் வாழ்ந்திருக்கிறார். கவிதை படைப்பதில் இவருக்கு இருக்கும் அக்கறையும், ஆர்வமும் தான் வியக்கவைக்கிறது என்னை. கையில் கிடைக்கிற பொருளை எல்லாம் கவிதைக்கான பாடுபொருளாக்கியிருக்கிறார்.

இங்கே சுற்றிலும் பலரின் கைகளில் சுருள்வாளாய் சுழலும் கவிதை, சொக்கலிங்கம் கைகளில் குறுவாளாய்க் குதிக்கிறது.

**முள்**

உன் அழகை
நிதானமாய் ரசிக்க
நீ வரும் பாதையில்
முள்ளை
உதிர்த்து விடுகின்றது செடி

என்றொரு கவிதை. முள்ளை உதிர்க்கிற செடியை வைத்துக்கொண்டு, பூக்களை உதிர்த்து விடும் புதுக் கவிதை வித்தையை நடத்துகிறார் கவிஞர்.

கவிதைகள் எப்போதோ ஒருமுறை பற்றிக்கொள்ளுகிற தான்சேனின் தீபங்கள். கிளியோ பாத்ராவின் மார்பு மைதானத்தில் கைகுலுக்கிக் கொண்ட பாம்புகள். மாவீரன் அலெக்சாண்டருக்கு மண்டை ஓடுகள் நடத்திய மௌனமான பாடங்கள். லிவிங்ஸ்டனின் கதையில் வானத்தில் வடுக்களை விதைத்து விட்டுப்போன சீகல் பறவையின் சிலிர்ப்பு.

இதுதான் வார்த்தைச் சித்தர் வலம்புரிஜான் கவிதைகளைப் பற்றி வைத்திருந்த கண்ணோட்டம். அதை உண்மை என்று உங்களையும், என்னையும் உணரவைக்கிற கவிதைகளின் தொகுப்புதான் இது!

‘மரம்’ என்றொரு கவிதை

கால்கடுக்க நின்று கொண்டிருந்தது
பூங்காவின் மரம்
மரத்தடியில் நாற்காலிகள்

மரத்தைப் பற்றிய இந்தக்கவிதை நமக்குள் கோடாரி யாக விழுகிறது.

தாகம் எடுக்கையிலே
மழை அடிக்காதோ
வானம் இறங்கிவந்து
குடை பிடிக்காதோ

என்று கவிப்பேரரசு வைரமுத்து ஒரு பாட்டில் வெளிப்படையாய் விரித்த முரணை கவிதையில் மறைத்து வைத்திருக்கிறார் கவிஞர்.

சொட்டுமையை வைத்து நமக்கு குட்டுவைக்கிறது ஒரு கவிதை.

வாக்கு
கடமையைச் செய்ததற்கு
போட்டு விட்டார்கள்
விரலில் ஒரு சூடு
கருப்புமை கொண்டு

எந்த பொருளில் எத்தனைக் கவிதைகள் பாடி என்ன, சமூகத்தைப் பற்றிப் பாடும்போதுதான் கைகளில் ஏணியை எடுத்துக்கொண்டு, காலம் தேடத் தொடங்குகிறது கவிஞனை.

அன்று
நஞ்சை உண்டு சாகுபடி ஆனது
இன்று
நஞ்சை உண்டு சாகும்படி ஆனது

என்று தஞ்சை விவசாயிகளுக்காக என் தமிழ் அழுத போது தான் முத்தமிழ் அறிஞர் கலைஞர் முரசொலியால் என்னை முத்தமிட்டார். உடன்பிறப்பு மடல் முழுதும் (11.12.2003) என்னனு உச்சி முகர்ந்து வாழ்த்தினார்.

சொக்கலிங்கம் வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் வருத்தப்படுகிறார் என்பதை காயம்பட்ட சில கவிதைகள் காட்டிக் கொடுத்துவிடுகின்றன.

மூச்சிறைப்பு என்றொரு கவிதை, இந்தக் கவிஞனின் அகத்தைக் காட்டிவிடுகிறது நமக்கு.

யானைகளும்
குதிரைகளும்
ஓடிக்கொண்டிருக்கின்றன
மூச்சிறைத்தது
ராட்டினக்காரருக்கு

ஒற்றைத் தண்டவாளத்தில் ஓட நினைக்கிற கவிஞர் சொக்கலிங்கத்தை கைகாட்டிகள் நிறுத்தப்போவதில்லை. ஆனால் கவிதைகள் அவரை நிறுத்த வேண்டும். வானம்பாடிக் கவிஞர்களை வாசிக்க வாசிக்க அவர் வேகமெடுத்து விஸ்வரூபமெடுக்கக்கூடும்.

அப்போது கவிதைகள் கூடி காலத்தின் பக்கங்களில் கண்டிப்பாக நிறுத்தும் இந்தக் கவிஞரை.

நிறைய அன்புடன்
**நெல்லை ஜெயந்தா**



# முன்னுரை

கவிஞர் **ப. சொக்கலிங்கம்**

## கலையின் அரசி - கவிதை

**எ**ன்னுடைய முதல் கவிதை நூல் “பஞ்சவர்ணகிளி” (அக்டோபர் 2020), இரண்டாவது கவிதை நூல் “அஞ்சறைப் பெட்டி” (ஜூன் 2021), மூன்றாவது கவிதை நூல் “ஐம்புலன்” (டிசம்பர் 2021) ஆகியவற்றிற்கு கருத்து தெரிவித்து என்னை ஊக்கப்படுத்திய அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

கவிதைக்கு வெவ்வேறு விளக்கங்களை பல்வேறு கவிஞர்கள் கூறியுள்ளனர். சிலவற்றைப் பார்ப்போம்.

மரங்களில் இலை துளிர்ப்பதுபோல் துளிர்ப்பதுதான் கவிதை - கீட்ஸ்.

கவிதையின் பண்புகளாக புவிக்கு அணி, சிறந்த பொருள், அறிவுக்கு விருந்து, ஒளிவு, நல்ல ஓட்டம், திணையும் துறையும் மேம்படுத்துதல் ஆகியவற்றைக் கம்பன் கூறுவான்.

கவிதையைக் கலையின் அரசி என்பார்கள். கல்லாத கலை என்பார்கள். கவிதை என்றால் என்ன? யாப்பிலக்கண விதிகளைக் கவனித்து, வார்த்தைகளைக் கோர்த்து அமைத்துவிட்டால் கவியாகுமா? கவிதையின் இலட்சணங்கள் என்ன? கவிதைக்கு பல அம்சங்கள் உண்டு. ஆனால் அவற்றின் கூட்டுறவு மட்டும் கவிதையை

உண்டாக்கிவிடாது. கவிதையின் முக்கியபாகம் அதன் ஜீவசக்தி. அது கவிஞனின் உள்மனத்தின் உணர்ச்சி உத்வேகத்தைப் பொறுத்துதான் இருக்கிறது என்பார் புதுமைப்பித்தன்.

என் கவிதைகளும் என் உள்மனத்தின் உத்வேகத் தைப் பொறுத்தே அமைந்து விடுகின்றது. என் கவிதைகள் பெரும்பாலும் நான்கண்டு, பாதிக்கப்பட்ட காட்சிகளாகத் தான் இருக்கும். உதாரணத்திற்கு, மாட்டுப் பொங்கல் (15.02.2022) அன்று, அதிகாலை, சென்னையில். தேநீர்க் கடை வாசலில் நான் கண்ட காட்சி, கீழ்கண்ட கவிதையாய் ஆனது.

“எலும்புகள் துருத்திய பசு

சென்னை தேநீர்க் கடை வாசலில்

“மில்க் பிகிஸ்” பிஸ்கட் ஊட்டிக் கொண்டிருந்தார்

தேநீர் அருந்த வந்திருந்த ஒரு முதியவர்

கண்கள் குளமாயின

பாரம்பரியம் நினைவுக்கு வந்ததால்”

என்னுடைய தொடரும் முயற்சியாக இந்த முறை “ஒற்றைத் தண்டவாளம்” என்ற தலைப்பில், தற்போது உங்கள் கைகளில்.

இந்த நூலும் தங்களுக்கு ஒரு சோர்வு நீக்கியாக இருக்கும் என்று நம்புகிறேன்.

அண்மையில் எழுபத்தைந்தாண்டு பிறந்தநாள் விழா கொண்டாடிய கலைமாமணி ஏர்வாடி எஸ்.ராதாகிருஷ்ணன் அவர்கள், 50 ஆண்டு காலமாக, “கவிதை உறவு” இலக்கிய சிற்றிதழை நடத்திவருகிறார். இளம் கவிஞர்களை ஊக்கப்படுத்துவது அவருக்கு மிகவும் பிடித்த ஒன்று. கவிதை உறவு இதழில், தங்கள் இலக்கிய பயணம் துவங்கி, பெரிய நிலை அடைந்தவர்கள் பலர். “பேனாவுக்கு மட்டுமல்ல இந்நூல் பேனாக்காரனுக்கும் பிறவிப்பயன்” எனும் தலைப்பில் அருமையான

அணிந்துரை எழுதித் தந்துள்ள கலைமாமணி ஏர்வாடி எஸ். ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

கவிதைகள், கவியரங்கங்கள், திரைப்படப் பாடல்கள், தொகுப்பாளர், என பல்வேறு பரிமாணங்கள் கொண்ட பொறியாளர் திரு. நெல்லை ஜெயந்தா அவர்கள் “குறுவாள்” எனும் தலைப்பில் அருமையான வாழ்த்துரை எழுதித் தந்துள்ளர். இவர் கவிதைகள் வழங்குவதை பொதுப்பணியாகக் கொண்ட பொதுப்பணித்துறை செயற் பொறியாளர். திரு. நெல்லை ஜெயந்தா அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

இந்த நெல்லைக்கு, இரு நெல்லைகளை அணிந்துரை மற்றும் வாழ்த்துரை வழங்கச் செய்து, ஒரு நெல்லை சங்கமத்தை நிகழ்த்திவிட்டது, இந்த ஒற்றைத் தண்டவாளம்.

மாதந் தோறும் ‘இலக்கியச்சோலை’ சிற்றிதழ், எண்ணற்ற கவியரங்கங்கள், பிரபலமாகதவர்களுக்கு ஊக்கமளித்து, அவர்களின் நூல்களை வெளியிட்டு, அவர்களின் கவிதைகளை பிரசுரித்துஉன, தமிழ்ப்பணி ஆற்றிவரும் திரு. சோலை தமிழினியன் (சோலை பதிப்பகம்), இந்த நூலையும் வெளியிடுகிறார் என்பது கூடுதல் சிறப்பு. திரு.சோலைதமிழினியன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

இந்த ஒற்றைத்தண்டவாளம் தங்களுடைய எண்ண ஓட்டங்களை அடுத்த தளத்திற்கு எடுத்துச்செல்லும் என்ற நம்பிக்கையுடன்...

**- ப. சொக்கலிங்கம்**

சென்னை
09.06.2022

### விதைகள்

விதைகள்
விதைக்கப்படுகின்றன
விதைகளாக

### பனையோலை விசிறி

காற்று விசிறியது போய்
காற்றை விசிறிக் கொண்டு

### பசி

தாய், மகள் பசி தீர்த்தது
ஒற்றை ரொட்டித் துண்டு
மகள் மட்டும் உண்டாள்

### நூல்

மனதை வசியப்படுத்தும்
மை தடவிய பக்கங்களால்

### *தாமரை*

மேலே நீர் பட்டுவிட்டால் தீட்டு
இந்த
ஆதிக்கவர்க்க மலருக்கு

### *விறகு அடுப்பு*

இரைப்பை நிரப்பும் பணி
இறுதியாய்
எரியூட்டப்படுகையில்

### *மரணித்த மீன்கள்*

இறுதிச் சடங்காய்
ஒரு
எண்ணெய் குளியல்